# காதல் காதல் காதல்

அவர்கள் அந்த வீட்டை வாங்கியிருந்தார்கள். அது தெரு வீடு, ஓட்டுக் கூரையும் — ஓட்டுச் சுவருமான பழைய கட்டடம்.

அண்ணி சியாமளாவுக்கு அதை அவ்வளவாகப் பிடிக்க வில்லை. எலி வலையானாலும் தனி வலை. பின்னால் பணம் கையில் மிஞ்சும்போது இடித்துத் தள்ளிட்டு மாடிக் கட்டட மாகக் கட்டிக்கலாம் என்று அண்ணன் முரளி பிடிவாதமாகத் தான் அதை விலைக்கு வாங்கினார்.

வீட்டுக்காரக் கிழவி பூரணி அதைக் காலி செய்து கொடுத்தபோது ஒரு மூச்சு கண்ணீர் விட்டாள். ஐம்பது ஆண்டா என் கணவரோட வாழ்ந்த வீடு. இப்போ பணம் தேவைப்படறதால வித்துட்டேன். என்னவோ என் குழந்தையைப் பிரியராப்பல இருக்கு...'' சாவியைக் கொடுத்து விட்டு தழுதழுத்தாள்.

''சும்மா கொடுத்தது போல ஏன் அழுது தொலைக் கிறாள், கிழவி? ஒண்ணரை இலட்சம் கொடுத்திருக்கோம்'' — எரிச்சலுடன் அண்ணி அடிக்குரலில் முணுமுணுத்தாள்.

''தெரிஞ்ச தச்சனை வச்சு வாசல் கதவு, பின் கதவு, சன்னல்களை எல்லாம் பர்மா தேக்கிலே இழைச்சுப் போட்டார் என் கணவர்.''

''அவர் போகும்போது தலையில் தூக்கிட்டுப் போகலை. நீங்களாவது இதுகளுக்கு காசை குடுத்துட்டுப் போறீங்க... என்ன பெரிய அறுவை'' தம்பி சம்பந்தம் அவள் காதுகளில் கிசுகிசுத்தான்.



வெளுத்த தலையும் சுருங்கிய முகமும், அழுது சிவந்த கண்களுமாகத் தள்ளாடிய நடையுடன் வீட்டின் ஒவ்வொரு பகுதியையும் அவர்களுக்கு அறிமுகம் செய்து கொண்டிருந்த பூரணியைக் கண்டு மாலதி மனம் இளகிப் போனாள்.

ஏன் அண்ணனும் அண்ணியும் இப்படி அவசரப்படு கிறாங்க! ஏன் தம்பி சம்பந்தத்துக்கு கொஞ்சமும் இங்கிதம் தெரியவில்லை? பல ஆண்டு இன்பமும் துன்பமும் அனுப வித்து வாழ்ந்த வீடு. அவற்றை நினைத்துப் பார்த்து கிழவி பெருமூச்சு விட்டபடி வளைய வருகிறாள். எத்தனை நேரம் அங்கே நிற்கப் போகிறாள்? வாசலில் ஆட்டோ நிற்கிறது. இன்னும் பத்து நிமிடம் அங்கே தங்கினாலே அதிகமாச்சே... அவளது ஆதங்கத்தை கொஞ்சம் மதித்தால் என்ன? இந்த அண்ணி என்ன செய்தாங்க!

அண்ணனது பழைய ஸ்கூட்டரை விற்கும்போது வாசலில் வந்து எதையோ பறிகொடுத்து விட்டதுபோல கண் கலங்கி நிற்கலையா? தன்னுள் சினந்து கொண்டாள், மாலதி.

''வீட்டை படுசுத்தமாக வச்சுக்கிற பழக்கம். ஆனால் அவர் போன பிறகுகூட துணைக்கிருந்த மச்சினர் மதன் வெளி நாட்டுக்குப் போனதும் நோயும் தனிமையும் வயசும் என்னை ரொம்ப ஒடுக்கிட்டது. போட்டதை போட்டபடி வச்சு குடும்பம் நடத்தினேன். சமையலறையில் கொஞ்சம் ஒட்டடை இருக்கும். சாமான் அறையைப் பெருக்கி நாளாச்சு.''

''என்ன தொண தொணப்பு? வீட்டை வாங்கினவளுக்கு சுத்தப்படுத்தி வச்சுக்கத் தெரியாதா?'' அண்ணி எரிச்சலுடன் தன் கணவனிடம் தாழ்ந்த குரலில் சொன்னாள்.

போக மனமின்றி பூரணி கூடத்தில் நின்று கொண்டு இருந்தாள். அவளது முகத்தில் தெரிந்த சோகம் மாலதியின் நெஞ்சை வருடியது. ''பாவம் இன்னும் சில நொடிகள் கிழவி

தான் வாழ்ந்த வீட்டிலே நின்று விட்டுத்தான் போகட்டுமே என்ன குறைந்து விடப்போகிறது?'' உள்ளூர இரக்கப் பட்டாள்.

''தோட்டத்துத் தண்ணி இளநீர் போல இருக்கும். ஊர் முழுக்க தண்ணிப் பஞ்சம் வந்தப்போ கூட இந்தக் கிணற்றிலே தண்ணி குறைஞ்சதே இல்லே. அக்கம் பக்கத்து பெண்கள் வந்து ஆளுக்கு ஒரு குடம் எடுத்துக்க நான் அனுமதிக்கிற பழக்கம்.''

''என் வீட்டுக்குள்ளே கண்டவங்களை நான் விட மாட்டேன். தெரு பம்பு செட்டிலே தண்ணி பிடிச்சுக் கோங்கன்னு கண்டிப்பா சொல்லி விடுவேன்'' சியாமளா தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

கிழவி லேசாக முறுவலித்தாள். ''முற்றத்துக்கு போன ஆண்டுதான் கம்பித் தடுப்பு போட்டேன். இந்தப் பக்கம் திருட்டு பயமில்லே. ஆனாலும் காலம் கெட்டுக் கிடக்கே.''

''அதான் தெரியுதே விளக்கம் வேறே யார் கேட்டா?'' சியாமளா கொஞ்சம் உரத்த குரலில் சிடுசிடுத்து விட்டாள்.

கிழவி முகம் சுருங்கிப் போனதைக் கண்டு மாலதி மனம் வேதனைப்பட்டாள்.

'வயசான அந்த அம்மாளிடம் பரிவா ஒரு வார்த்தை பேசினால் அண்ணியின் மதிப்பு இறங்கி விடுமோ?' உள்ளூர வெகுண்டாள்.

வாயிலில் நின்ற ஆட்டோ, அவளை அழைக்க அலறவே தாழ்வாரத்தில் தயங்கி ஒரு கணம் நின்று விட்டு கைகூப்பி வணக்கம் தெரிவித்தபடி பூரணி மெல்ல வெளியேறினாள்.

''அப்பா! பெரிய தலை வேதனை ஒரு வழியா போச்சு'' என்று கூறியபடி சியாமளா வீட்டைச் சுத்தப்படுத்துவதில்



முனைந்தாள். அவளுக்கு உதவ மாலதி அன்று கல்லூரியில் இருந்து விடுப்பு எடுத்துக் கொண்டிருந்தாள்.

''என்ன தூசி! என்ன அழுக்கு!' புலம்பிக்கொண்டே சியாமளா வேகமாக வீட்டைப் பெருக்கிவர, குவிந்த குப்பையை வாளியில் வாரி எடுத்துக்கொண்டு பின்னால் இருந்த தொட்டிக்குள் போடக் கிளம்பினாள், மாலதி. சூரிய வெளிச்சத்திலே வாளியின் ஓரத்தில் குப்பையில் ஏதோ பளிச்சிட்டது. வியப்புடன் கையில் எடுத்துப் பார்த்தபோது, அது ஓர் அழகான மோதிரம். முந்தானையால் துடைத்து விட்டுப் பார்த்தாள். நீலமும், பச்சையுமாக கண்களைப் பறிக்கும் போல ஒளிவிட்டது, அந்த மோதிரம். வைரக்கல் பதித்ததா?

அந்த வீட்டுக் குப்பையில் கிடந்த அது கட்டாயம் பூரணியம்மாளுடையதாகத்தான் இருக்கும்.

அண்ணியிடம் காண்பித்தால் என்ன சொல்வாள்? ''வீட்டை வாங்கியிருக்கிறோம். அதில் உள்ள பொருள் எல்லாம் நம்மைச் சேர்ந்தது. பேசாமல் மோதிரத்தை என் பீரோவில் வச்சு பூட்டு. பின்னால் நகைக் கடைக்கு எடுத்துப் போய், இது வைரமா, வெள்ளைக் கல்லான்னு தெரிஞ்சுக் கலாம்'' என்று அதட்டுவாள்.

பாவம் கிழவி! எத்தனை பணம் போட்டு வாங்கினாளோ? வீட்டை அவர் வாங்கியிருந்தாலும் நகை அவர்களுக்கு சொந்தமாகி விட முடியாதே?

''புழக்கடையில் என்ன பண்ணிக்கிட்டு இருக்கே?'' அண்ணி அதட்டும் குரல் கேட்டு திடுக்கிட்ட மாலதி, மோதிரத்தை முந்தானையில் முடிந்து கொண்டு உள்ளே வந்து விட்டாள். தொடர்ந்து இரண்டு நாள் தன் கண்டுபிடிப்பை

வெளியே சொல்ல முடியாது. அதைத் தன்னுடன் வைத்துக் கொண்டு அவள் பட்டபாடு!

அன்று அவளுக்கு அந்த யோசனை தோன்றியது.

கல்லூரியிலிருந்து திரும்பும்போது, பூரணியம்மாள் புதிதாகக் குடியேறியிருக்கும் வீட்டுக்குப் போய் அவளைப் பார்த்தால்? அப்படியே செய்தாள்.

கதவைத் திறந்த பூரணியின் முகம் புன்னகையில் மலர்ந்தது.

''வாம்மா, வா உள்ளே'' அன்போடு வரவேற்றாள். ''என்ன விஷயம்? அலமாரி சாவி எதையாவது நான் தர மறந்துட்டேனா? உட்கார்'' உபசரித்தாள்.

''சொந்த வீட்டிலிருந்து விட்டு இப்போ வாடகைக்கு இந்த இடத்திலே இருக்கேன். என்ன செய்யறது, பணம் தேவைப்பட்டது....'' பெருமூச்செறிந்தாள்.

''உட்கார நேரமில்லை'' என்ற மாலதி, ''இதைப் பாருங்கோ... இந்த மோதிரம் உங்களுடையதுதானா?'' கேட்டபடி தன் மணிபர்சிலிருந்த அந்த மோதிரத்தை எடுத்துக் கொடுத்தாள்.

பூரணியின் முகம் மத்தாப்புப் போல மலர்ந்தது. ''எங்கேயோ தொலைச்சுட்டேன்னு இரண்டு நாளா நான் ரொம்ப கவலைப்பட்டேன். ராத்திரி தூக்கம்கூட இல்லே... நன்றியம்மா... நீ நல்லாயிருப்பே! எங்கே கிடைச்சது?''

''வீட்டைப் பெருக்கும்போது குப்பையில் கிடந்தது. பாவம், வைர மோதிரத்தை தொலைச்சா கவலையாகத்தானே இருக்கும்?''



இது வைர மோதிரம் இல்லே, சாதாரண வெள்ளைக்கல் மோதிரம். ஆனால், வைரத்துக்கு மேலே ரொம்ப உசத்தியானது. என் கணவர் எனக்கு எங்கள் முதல் தீபாவளியின் போது பரிசாக வாங்கித் தந்தது. இதைப் பார்க்கிறப்போ... என் மனசில்...'' பேச முடியாது கண் கலங்க உதட்டைக் கடித்துக் கொண்டாள், பூரணி.

சில விநாடிகளில் தன் உணர்வுகளை சமாளித்துக் கொண்டாள், அந்தக் கிழவி. தன் எதிரே நின்ற அந்த இளம் பெண்ணை கனிவோடு பார்த்து சிரித்தாள்.

''இதைப் பார்க்கும்போது பல நினைவுகள் வருது. இதைத் தந்த என் கணவர் இறந்துட்டார்... ஆனால், அந்த நினைவுகள் இறக்கலை. இன்னும் பசுமையா என் நெஞ்சில் இருக்கு...'' முறுவலித்தபடி கன்னத்தில் உருண்ட கண்ணீர் துளிகளைத் துடைத்துக் கொண்டாள்.

பூரணி கொடுத்த சிற்றுண்டியை முடித்துக் கொண்டு, விடைபெற்று வெளியே வந்த மாலதிக்கு மிக்க வியப்பு — காதல் என்னும் உணர்வு இளமைக்குத்தான் சொந்தம் என்று இதுவரை அவள் எண்ணி வந்தாள்.

இத்தனை வயதான இந்தக் கிழவி மனதில்... இன்னமும் அவள் கணவர்மேல் காதலா?

அப்படியென்றால்... காதல் என்பது யாவருக்கும் சொந்தமான ஓர் இனிய உணர்வா?

அதனால்தான் பாரதி அதை மூன்று முறை அழைத்து காதல்... காதல்... காதல்...'' என்று கவிதை பாடினானோ?

மனம் நெகிழ்ந்தவளாக நடந்தாள் மாலதி!

★ ★ ★